# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032.
தொலைபேசி எண்: 044–22201337.
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

முன்னிலை : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 217/ந/2025, நாள் 23.10.2025

திரு. P. மாரியப்பன்,
சாத்தூர், விருதுநகர் மாவட்டம் ........ முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
கோவில்பட்டி நகராட்சி, தூத்துக்குடி மாவட்டம் ........ எதிர்மனுதாரர்

விருதுநகர் மாவட்டம், சாத்தூர், ஒரிஜினல் கிணற்று தெரு, கதவு எண்.29/6–D என்ற முகவரியைச் சேர்ந்த திரு. P. மாரியப்பன் என்பவரது 16.06.2025 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 17.06.2025 அன்று பெறப்பட்டு, 217/ந/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

விருதுநகர் மாவட்டம், சாத்தூர், ஒரிஜினல் கிணற்று தெரு, கதவு எண்.29/6–D, என்ற முகவரியைச் சேர்ந்த திரு. P. மாரியப்பன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள 16.06.2025 நாளிட்ட புகார் மனுவில் தனக்கு கோவில்பட்டி நகராட்சி ஆணையாளர் சேமநல நிதித் தொகை வழங்கவில்லை என முறையீடு செய்துள்ளார்.

2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 25.06.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் கோவில்பட்டி நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3) கோவில்பட்டி நகராட்சி ஆணையரின் 11.08.2025 நாளிட்ட கடிதம் ந.க.எண்.2835/2025/பி3–ல் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் திரு. பொ. மாரியப்பன் முன்னாள் வருவாய் ஆய்வாளர் 19.01.2015 முதல் 20.06.2018 வரையிலான காலத்தில் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சேமநலநிதி தொகை வழங்குமாறு புகார் அளிக்கப்பட்டதை தொடர்ந்து, மேற்படியாளருக்கு வழங்கப்பட வேண்டிய சேமநல நிதி தொகை ரூ.2,21,172/– ஐ தனியருக்கு மின்செலுத்துச் சீட்டின் மூலமாக தனியரின் வங்கி கணக்கிற்கு வரவாக்கப்பட்டுள்ளது என்பதை பணிவுடன் சமர்ப்பிக்கின்றேன்." எனத் தெரிவித்துள்ளார்.

4) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான கோவில்பட்டி நகராட்சி ஆணையர் ஆகியோரை 29.09.2025 அன்று தூத்துக்குடி அரசு விருந்தினர் மாளிகையில் நடைபெறவுள்ள விசாரணைக்கு ஆஜராகுமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 04.09.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) இந்நிலையில் மனுதாரர் 18.09.2025 நாளிட்ட கடிதத்தின் மூலம் கீழ்கண்ட விவரங்களை இம்முறை மன்ற நடுவத்திற்கு அனுப்பி வைத்துள்ளார்.

"கோவில்பட்டி நகராட்சி ஆணையரின் 11.08.2025 நாளிட்ட கடிதம் ந.க.எண்.2835/2025/பி3–ல் கண்ட விரைப்படி கோவில்பட்டி நகராட்சியிலிருந்து சேமநல நிலுவைத் தொகை வழங்கப்பட்டு விட்டதால் எனது புகார் மனுவிற்கு விசாரணை ஏதும் தேவையில்லை என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேற்கண்ட விவரப்படி எனது புகார்மனுவை கருணையுடன் பரிசீலனை செய்து உரிய காலத்தில் சேமநல தொகையை எனக்கு வழங்க நடவடிக்கை மேற்கொண்டதற்கு எனது சார்பாகவும், எனது குடும்பத்தின் சார்பாகவும் மிகவும் நன்றிக்கடன் பெற்று உள்ளோம்." எனத் தெரிவித்துள்ளார்.

5) மனுதாரரின் புகார் மனு, கோவில்பட்டி நகராட்சி ஆணையரின் அறிக்கை, மனுதாரரின் 18.09.2025 நாளிட்ட கடிதம் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

மனுதாரர் கோவில்பட்டி நகராட்சியில் வருவாய் ஆய்வாளராக 19.01.2015 முதல் 20.08.2018 வரை பணிபுரிந்த காலத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சேமநல நிதித் தொகையை உரிய வட்டியுடன் கணக்கிட்டு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொண்டிருப்பது அறியவருகிறது.

மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தில் புகார் அளிக்கப்பட்டதை தொடர்ந்து, மனுதாரருக்கு வழங்கப்பட வேண்டிய சேமநல நிதி தொகை ரூ.2,21,172/–ஐ மின்செலுத்துச் சீட்டின் மூலம் வழங்கப்பட்டுள்ள விவரம் கோவில்பட்டி நகராட்சி ஆணையரின் அறிக்கையிலிருந்து அறியவருகிறது.

மனுதாரரும் தனது 18.09.2025 நாளிட்ட கடிதத்தில் தனக்கு கோவில்பட்டி நகராட்சி ஆணையரிடமிருந்து சேமநல நிதித் தொகை பெறப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளதால், கோவில்பட்டி நகராட்சி ஆணையரின் அறிக்கையினை ஏற்று இப்புகார் மனு மீதான நடவடிக்கையினை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு, அக்டோபர் 23–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. P. மாரியப்பன்,
29/6–D, ஒரிஜினல் கிணற்று தெரு,
சாத்தூர் – 626 203, விருதுநகர் மாவட்டம்.
2. ஆணையாளர்,
கோவில்பட்டி நகராட்சி,
தூத்துக்குடி மாவட்டம்.
3. நகராட்சிகளின் இயக்குநர்,
நகராட்சிகளின் இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி நகர், சென்னை – 28.
4. இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகராட்சிகளின் இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி நகர், சென்னை –600 028.

நகல்:
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ.உதிரிகள்

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்.